சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.162/2025

CNR No.TNSV030003942025

...

சந்தியாகு ...வாதி

..எதிர்..

முத்தையா முருகேசன் சாரிடபிள் டிரஸ்ட்

அதன் மேனேஜிங் டிரஸ்டி முருகேசன் மூலம் ...பிரதிவாதி

இவ்வழக்கானது 16.07.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 01.06.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.செங்கோல் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவரை தோன்றாத்தரப்பினராக தீர்மானித்தும் , வாதி தரப்பு வாதுரையை கேட்டும் இதுநாள் வரை இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>தீர்ப்புரை</u>

தாவா சொத்துக்கள் வாதிக்கு தனித்த பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தினை பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என மேற்படியார்கள் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பித்தும்,

தாவா 2வது இலக்க சொத்தில் வாதி கிரையம் பெற்ற 27.03.2006 தேதிக்கு பின்னர் தாவா 2வது இலக்க சொத்தில் வாதியின் பாகத்தினையும் சேர்த்து பிரதிவாதி கடந்த 11.11.2011-ம் தேதியன்று காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவல ஆவண எண்.5686/2011 மூலம் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது (null and void) என விளம்புகை செய்தும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் சுருக்கம்-**

தாவா சொத்துக்களான சர்வே எண்.51/1 விஸ்தீரணம் 0.31.0 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.51/4 விஸ்தீரணம் 0.14.5 ஏர்ஸ் ஆகிய புஞ்சை நிலங்கள் ஆதியில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், முடுக்கூரணி கிராமத்தைச் சேர்ந்த இருதயம் உடையார் அவர்களுக்கு தனித்த பாத்தியமான சொத்தாகும். தாவா சொத்துக்களான சர்வே எண்.51/1 விஸ்தீரணம் 0.31.0 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.51/4 விஸ்தீரணம் 0.14.5 ஏர்ஸ் ஆகிய புஞ்சை நிலங்களை மேற்படி இருதயம் உடையார் அவர்கள் தனித்த பாத்திய அனுபவம் செய்து வந்தார். தமிழக அரசும் தாவா சொத்துக்களில் மேற்படி இருதயம் உடையார் அவர்களின் அனுபவத்தினை ஊர்ஜிதம் செய்து மேற்படி இருதயம் உடையார் பெயரிலேயே பட்டா வழங்கியுள்ளது. மேற்படி இருதயம் உடையார் அவர்களின் காலத்திற்கு பிறகு அவரது சட்டப்படியான வாரிசுகளான ஆசீர்வாதம் மற்றும் ஆரோக்கியம் ஆகியோர்கள் வாரிசு கிரமத்தில் தாவா சொத்துக்களை பாத்தியமடைந்து தனித்த பாத்திய அனுபவம் செய்து வந்தார்கள்.

இந்நிலையில் தாவா சொத்துக்களில் 1வது இலக்க சொத்தான சர்வே எண்.51/1 விஸ்தீரணம் 0.31.0 ஏர்ஸ் புஞ்சை நிலத்தில் இருதயம் உடையார் அவர்களின் வாரிசான ஆசீர்வாதம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கான வடபுறம் 0.15.5 ஏர்ஸ் நிலத்தினை வாதியும் கடந்த 11.09.2007-ம் தேதியன்று காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2469/2007 மூலம் சரியான பிரதி பிரயோஜனத்திற்கு மேற்படி ஆசீர்வாதம் அவர்களிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரையத்தின் அடிப்படையில் தாவா 1வது இலக்க சொத்தில் வடபுறம் 38 ½ செண்ட் நிலத்தில் வேலி அமைத்து தனித்த பாத்திய அனுபவம் செய்து வருகிறார். தாவா 1வது இலக்க சொத்தில் மேற்படி கிரையம் போக மீதமுள்ள தென்புறம் 0.15.5 ஏர்ஸ் நிலத்தினை இருதயம் உடையார் அவர்களின் வாரிசான ஆரோக்கியம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கான பிரதிவாதியும் கடந்த 18.11.2011-ம் தேதியன்று காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5788/2011 மூலம் சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கிரையம் பெற்று தனித்த பாத்திய அனுபவம் செய்து வருகிறார். மேற்படி கிரைய ஆவணங்களின்

அடிப்படையில் தாவா 1வது இலக்க சொத்துக்களுக்கு வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்படாமல் தாவா 1வது இலக்க சொத்திற்கு முழுமையாக பிரதிவாதி பெயரில் தவறுதலாக பட்டா மாறுதல் செய்யப்பட்டு விட்டது. தாவா 1வது இலக்க சொத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா தவறுதலாக ஏற்பட்டாலும், தாவா 1வது இலக்க சொத்தின் வடபுறம் வாதிக்குரிய பங்கினை வாதியும் கல்கால்கள் ஊன்றி வேலி அமைத்து நாளது தேதி வரை தனித்து பாத்திய அனுபவம் செய்து வருகிறார். தாவா 1வது இலக்க சொத்தில் வடபுறம் 0.15.5 ஏர்ஸ் நிலம் வாதிக்கு மட்டுமே தனித்து கிரையப் பாத்தியமான சொத்தாகும். பிரதிவாதிக்கு தாவா 1வது இலக்க சொத்தில் வடபுறம் 0.15.5 ஏர்ஸ் நிலத்தில் எவ்விதமான பாத்தியமோ, அனுபவமோ, உரிமையோ எந்த காலத்திலும் இருந்ததில்லை.

அதேபோல் தாவா 2வது இலக்க சொத்தான சர்வே எண்.51/4 விஸ்தீரணம் 0.14.5 ஏர்ஸ் புஞ்சை நிலத்தில் இருதயம் உடையார் அவர்களின் வாரிசான ஆசீர்வாதம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கான தென்புறம் 18 செண்ட் நிலத்தினை வாதியும் கடந்த 27.03.2006-ம் தேதியன்று காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.540/2006 மூலம் சரியான பிரதி பிரயோஜனத்திற்கு மேற்படி ஆசீர்வாதம் அவர்களிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரையத்தின் அடிப்படையில் தாவா 2வது இலக்க சொத்தில் தென்புறம் 18 செண்ட் நிலத்தில் வேலி அமைத்து ஊரில் யாவரும் அறிய தனித்த பாத்திய அனுபவம் செய்து வருகிறார். இந்நிலையில் பிரதிவாதியும் தாவா 2வது இலக்க சொத்தில் மீதம் உள்ள பாதி பங்கை வாங்குவதற்கு பதிலாக தெரிந்தோ அல்லது தெரியாமலோ தாவா 2வது இலக்க சொத்து முழுவதையும் வாதி கிரையம் பெற்ற 27.03.2006 தேதிக்கு பின்னீடு தாவா 2வது இலக்க சொத்திற்கு யாதொரு சம்மந்தமும் இல்லாத இருதயம் மகன் அல்போன்ஸ் என்பவரிடமிருந்து கடந்த 11.11.2011-ம் தேதியன்று காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவல ஆவண எண்.5686/2011 மூலம் கிரையம் பெற்றுள்ளார். தாவா 2வது இலக்க சொத்தில் மேற்படி அல்போன்ஸ் அவர்களுக்கு எவ்விதமான பாத்தியமோ, அனுபவமோ எந்த காலத்திலும் இருந்ததில்லை. மேற்படி கிரையத்தின் அடிப்படையில் தாவா 2வது இலக்க சொத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. தாவா 2வது இலக்க சொத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா தவறுதலாக ஏற்பட்டாலும், தாவா 2வது இலக்க சொத்தின் தென்புறம் வாதிக்குரிய

பங்கினை வாதியும் கல்கால்கள் ஊன்றி வேலி அமைத்து நாளது தேதி வரை தனித்து பாத்திய அனுபவம் செய்து வருகிறார். தாவா 2வது இலக்க சொத்தில் தென்புறம் 18 செண்ட் நிலம் வாதிக்கு மட்டுமே தனித்து கிரையப்பாத்தியமான சொத்தாகும். பிரதிவாதிக்கு தாவா 2வது இலக்க சொத்தில் தென்புறம் 18 செண்ட் நிலத்தில் எவ்விதமான பாத்தியமோ, அனுபவமோ, உரிமையோ எந்த காலத்திலும் இருந்ததில்லை. தாவா 2வது இலக்க சொத்தைப் பொறுத்து பிரதிவாதியின் கடந்த 11.11.2011-ம் தேதிய கிரையப் பத்திரம் தாவா 2வது இலக்க சொத்தில் தென்புறம் 18 செண்ட் நிலத்தின் உண்மையான உரிமையாளரான வாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை. மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை.

தாவா சொத்துக்களுக்கு பிரதிவாதி பெயரில் தவறுதலாக ஏற்பட்ட பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் தனக்கு மட்டுமே பாத்தியமும், உரிமையும் இருப்பதாக பிரஸ்தாபித்துக் கொண்டு வாதியின் சட்ட காலத்திற்கு மேலான அனுபவத்தை தடை செய்யப்போவதாக கடந்த 07.10.2024-ம் தேதி முதல் பிராஸ்தாபித்து வருகிறார். வாதியும் மேற்படி விபரங்கள் குறித்து பிரதிவாதியிடம் முறையிட்ட போது உன்னால் முடிந்ததை பார் என்று கூறியதோடு, தாவா சொத்துக்களில் அக்கிரம பிரவேசம் செய்து வாதியின் சட்ட காலத்திற்கு மேலான அனுபவத்தினை தடை செய்யப்போவதாக கூறி வாதியையும் உதாசீனப்படுத்தி திருப்பி அனுப்பிவிட்டார். பிரதிவாதி கூறுவது போல் செய்து விடும் பட்சத்தில் வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், கஷ்டமும் ஏற்பட வாய்ப்புள்ளது. பிரதிவாதியும் ஆள் பலமும், பண பலமும் மிக்கவர், சட்டத்தை மதியாது எதையும் துணிந்து செய்யக்கூடியவர். எனவே பிரதிவாதியை இந்நீதிமன்ற உத்தரவு மூலம் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. எனவே வாதியும் தாவா சொத்துக்கள் தனக்கு தனித்த பாத்தியமானது என விளம்புகை செய்யக்கோரியும், அதனை தொடர்ந்து தாவா சொத்துக்களில் வாதியின் அமைதியான அனுபவத்தினை பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என மேற்படியார்கள் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா 2வது இலக்க சொத்தில் வாதி கிரையம் பெற்ற 27.03.2006 தேதிக்கு பின்னீடு தாவா 2வது இலக்க சொத்திற்கு யாதொரு சம்மந்தமும் இல்லாத இருதயம் மகன் அல்போன்ஸ் என்பவரிடமிருந்து வாதியின் பாகத்தினையும் சேர்த்து பிரதிவாதி கடந்த 11.11.2011-ம்

தேதியன்று காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவல ஆவண எண்.5686/2011 மூலம் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது (null and void) என விளம்புகை செய்யக் கோரியும், தாவா வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.

3. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜராகாததால் பிரதிவாதியை தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. <u>பிரச்சினை</u>-

வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா ?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளது. அமல்ராஜ் என்பவர் வா.சா.2 ஆகவும், ஜான்சன் என்பவர் வா.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை. பிரதிவாதி ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

6. <u>பிரச்சினைக்கான தீர்வு-</u>

தாவா வழக்கில் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக இருந்து அவருக்கு எதிராக Exparty உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், வாதியின் வழக்கை வாதி தான் உரிய ஆதரவைக்கொண்டு நிரூபித்திடவேண்டும். தாவா வழக்கின் சங்கதியை வாதி உரிய சாட்சிய சான்று தாக்கல் செய்து நிரூபித்துள்ளாரா? என பார்க்கையில், தாவா சொத்தின் சர்வே எண்.51/1 விஸ்தீரணம் 0.31.0 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.51/4 விஸ்தீரணம் 0.14.5 ஏர்ஸ் ஆகிய புஞ்சை நிலங்கள் ஆதியில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், முடுக்கூரணி கிராமத்தைச் சேர்ந்த இருதயம் உடையார் அவர்களுக்கு தனித்த பாத்தியமான சொத்து என்ற சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்து மேற்படி சங்கதியை வாதி நிரூபித்திடவில்லை. மேற்படி சங்கதி குறித்து வா.சா.2, வா.சா.3 சாட்சியம் அளித்திருந்தாலும் மேற்படி

சாட்சிய சங்கதியை ஒத்துரைத்து உறுதியூட்டிடும் வகையில் ஆவணங்கள்எதுவும் வா.சா.2, வா.சா.3 தாக்கல் செய்திடவில்லை.

7) தாவா சொத்துக்களான சர்வே எண்கள்.51/1, 51/4 ஆகிய புஞ்சை நிலங்களை மேற்படி இருதயம் உடையார் அவர்கள் தனித்த பாத்திய அனுபவம் செய்து வந்தார் என்பதற்கோ, தமிழக அரசும் தாவா சொத்துக்களில் மேற்படி இருதயம் உடையார் அவர்களின் அனுபவத்தினை ஊர்ஜிதம் செய்து மேற்படி இருதயம் உடையார் பெயரிலேயே பட்டா வழங்கியுள்ளது என்பதற்கோ எந்தவொரு ஆவணமும் வாதி தாக்கல் செய்து மேற்படி சங்கதியை உறுதியூட்டி நிரூபித்திடவில்லை.

8) இருதயம் உடையார் காலத்திற்கு பின் அவரின் சட்டப்படியான வாரிசுகளான ஆசீர்வாதம் மற்றும் ஆரோக்கியம் ஆகியோர்கள் வாரிசு கிரமத்தில் தாவா சொத்துக்களை பாத்தியமடைந்து ஊரில் யாவரும் அறிய தனித்த பாத்திய அனுபவம் செய்து வந்தார்கள் என்ற சங்கதியையும் உறுதியூட்டும் வகையில் ஆவணங்கள் எதுவும் வாதி தாக்கல் செய்திடவில்லை. மேலும் மேற்படி இருதய உடையார் என்பவருக்கு ஆரோக்கியம் மற்றும் ஆசீர்வாதம் மட்டுமே சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்பதை நிரூபித்திடவும் எந்தவொரு ஆதரவும் வாதி தரப்பில் தாக்கல் செய்திடவில்லை.

9) தாவா சொத்துக்களில் 1வது இலக்க சொத்தான சர்வே எண்.51/1 -ல் அவரின் வாரிசான ஆசீர்வாதம் அவர்களுக்கு சரிபாதி பங்கான வடபுறம் 0.15.5 ஏர்ஸ் நிலம் பாத்தியமானது என்பதை உறுதியூட்டி நிரூபித்திட எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்திடவில்லை. அதேபோல் சர்வே எண்.51/1-ன் சரிபாதி பங்கு இருதயம் உடையார் அவர்களின் மகன் ஆரோக்கியத்திற்கு பாத்தியம் என தெரிவிக்கப்பட்ட சங்கதியை உறுதியூட்டி நிரூபித்திட எந்தவொரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்திடவில்லை.

10) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணமானது சர்வே எண்.51/1-ல் வடபுறம் 0.15.5 ஏர்ஸ் நிலமானது ஆவண எண்.2469/2007 மூலமாக வாதி பெயருக்கு கிரையம் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தின்

மூலம் மேற்படி சொத்தை கிரையம் செய்திட்ட ஆசீர்வாதம் என்பவருக்கு மேற்படி சொத்து எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய உரிமைமூல ஆவணமோ, வருவாய்த்துறை ஆவணமோ வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் தாவா சர்வே எண்.51/1-ன் பாதி பங்கினை பிரதிவாதிக்கு ஆரோக்கியம் ஆவண எண்.5788/2011 மூலமா கிரையம் செய்ததாக வாதி தரப்பில் வா.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் தாவா சர்வே எண்.51/1 மட்டும் குறிப்பிடப்படாமல் மேலும் சில சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் வா.சா.ஆ.2-ல் கண்ட சொத்துக்களை கிரையம் கொடுத்த நபர்களாக 1) லேட்.கபிரியேல் மகன் மிக்கேல், 2) லேட்.இருதயம் மகன் ஆசீர்வாதம் 3) லேட்.ஆரோக்கியம் மகன் சந்தியாகு ஆகிய மூன்று நபர்கள் கிரையம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. மேற்படி வா.சா.ஆ.2-ல் கண்ட கிரையத்தொகையை எங்கள் குடும்ப குடும்பார்த்த செலவிற்காக ரொக்கமாக பெற்றுக்கொண்டு என சங்கதி உள்ளது.

11) தாவா சர்வே எண்.51/1 குறிப்பாக இருதயம் உடையார் மகன் ஆரோக்கியத்திற்கு பாத்தியப்பட்டதாக எந்தவொரு சங்கதியும் வா.சா.ஆ.2-ல் இல்லை என்பதோடு அதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் வா.சா.ஆ.2-உடன் இல்லை என்பதும் மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. மேற்கண்ட வகையில் தாவா சர்வே எண்.51/1 வழக்கு 1வது அயிட்ட சொத்திற்கு முன் பாத்தியஸ்தர்கள் குறித்து வாதி குறிப்பிட்டுள்ள வழக்கு சங்கதி வாதியால் நிரூபிக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

12) 1வது இலக்க சொத்தான சர்வே எண்.51/1 விஸ்தீரணம் முழுமைக்கும் பிரதிவாதி பெயருக்கு தவறுதலாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு வா.சா.ஆ.3 வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டதாக சொல்வதில் மேற்படி பட்டாவை ரத்து செய்திட வாதி தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு எந்தவொரு ஆதரவும் வாதி தாக்கல் செய்திடவில்லை.

13) தாவா 2வது இலக்க சொத்தான சர்வே எண்.51/4 விஸ்தீரணம் 0.14.5 ஏர்ஸ் புஞ்சை நிலத்தில் இருதயம் உடையார் அவர்களின் வாரிசான ஆசீர்வாதம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கினை வாதி கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட கிரைய சொத்தானது மேற்படி ஆசீர்வாதத்திற்கு எந்த வகையில் பாத்தியம் என்பதை உறுதியூட்டக்கூடிய ஆவணம் எதுவும் வாதி தாக்கல் செய்திடவில்லை. மேற்படி தாவா 2வது இலக்க சொத்து முழுவதையும் இருதயம் மகன் அல்போன்ஸ் என்பவரிடமிருந்து 11.11.2011-ம் தேதியன்று ஆவண எண்.5686/2011 மூலமாக பிரதிவாதி கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு வாசா.ஆ.5 வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் தாவா 2வது இலக்க சொத்தான சர்வே எண்.51/4 உடன் மேலும் 3 சொத்துக்களும் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மேற்படி கிரைய ஆவணமும் மரியராஜ் மகன் தாமஸ் (எ) தாமஸ்மார்ட்டின், சந்தியாகு மகன் வேதமுத்து, லேட்.மி. இருதயம் மகன் அல்போன்ஸ், லேட்.ராயர் உடையார் மகன் சவரிமுத்து, லேட்.ஆரோக்கியம் மகன் ராஜு ஆகிய 5 நபர்களால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

14) வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.5 ஆகிய கிரைய ஆவணங்களை எழுதிக் கொடுத்த நபர்களும் வாதி குறிப்பிடும் இருதயம் உடையார் என்பவருக்கும் என்ன உறவு என்பதையோ தாவா 1, 2 இலக்க சொத்துக்களைப்பொறுத்து வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.5 ஆகிய ஆவணங்களை எழுதிக்கொடுத்த தரப்பினர்களுக்கு மேற்படி சொத்துக்களில் உரிமைமூல பாத்தியம் உள்ளதா? அல்லது இல்லையா? என்றோ குறிப்பிட்டு எந்தவொரு சங்கதியையும் வாதி குறிப்பிடவில்லை என்பதோடு வா.சா.ஆ.5-ல் குறிப்பிடும் இருதயம் மகன் அல்போன்ஸ் என்பவர் தாவா சொத்திற்கு யாதொரு சம்பந்தமும் இல்லை என எதன் அடிப்படையில் வாதி சங்கதி தெரிவித்துள்ளார் என்பதை உறுதிபடுத்த எந்தவொரு ஆதரவையும் வாதி தாக்கல் செய்திடவில்லை.

15) வா.சா.ஆ.6 தாவா 2ம் இலக்க சொத்திற்கு பிரதிவாதி பெயரிலான10(1) கணினி நகல் ஆவணமாகும். வா.சா.ஆ1, வா.சா.ஆ.4 ஆகியவற்றின் கிரையதாரர்களுக்கும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.5 ஆகியவற்றின் கிரையதாரர்களுக்கும்

தாவா சொத்தினைப் பொறுத்து பாத்தியம் உள்ளது என்பது குறித்து எடுத்துக்காட்டிட எந்தவொரு ஆதரவையும் வாதி தாக்கல் செய்திடவில்லை. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களின் பேரில் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.5 ஆகிய கிரையதாரர்களின் பாத்திய உரிமை நிரூபிக்கப்படாத சூழலில் தாவா சொத்தினைப் பொறுத்து வாதிக்கு உரிமைமூல பாத்தியம் உள்ளது என்பதை முடிவு செய்திட இயலாது. மேற்கண்ட காரணங்களினால் தாவா சொத்துக்களைப்பொறுத்து வாதி கோரிய விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், ஆவண எண். 5686/2011 ஆவணம் குறித்த விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக தாவா வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.06.16 22:44:55 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

<u>வாதி தரப்பு சாட்சிகள்-</u>

வா.சா.1 - சந்தியாகு (வாதி)

வா.சா.2 - அமல்ராஜ்

வா.சா.3 – ஜான்சன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்-</u>

வா.சா.ஆ.1 - 11.09.2007- கிரைய ஆவணம் - அசல்

வா.சா.ஆ.2 -	18.11.2011-	கிரைய ஆவணம் -சான்று நகல்
வா.சா.ஆ.3-	12.07.2025-	தாவா 1வது இலக்கச் சொத்திற்கு பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 10(1)- கணிணி நகல்
வா.சா.ஆ.4 -	27.03.2006-	கிரைய ஆவணம் - அசல்
வா.சா.ஆ.5 -	11.11.2011-	கிரைய ஆவணம் -சான்று நகல்
வா.சா.ஆ.6-	12.07.2025-	தாவா 2வது இலக்கச் சொத்திற்கு பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 10(1) -கணிணி நகல்

பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணம்- இல்லை

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.06.16 22:45:06 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court, Sivagangai

O.S.No.162/2025

Draft/Fair Judgment

17.06.2026